**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேவகோட்டை**

**முன்னிலை : செல்வி. D. பூர்ணிமா, B.A.B.L. (Hons.), LL.M.,**

**நீதித்துறை நடுவர், தேவகோட்டை**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 18ம் நாள் புதன்கிழமை

**குற்றவியல் பல்வகை மனு எண். 166/2026**

1. சிவரஞ்சனி,
க/பெ. அழகப்பன்,

**....... மனுதாரர் / வாகன உரிமையாளரின் மனைவி**

**//எதிர் //**

1. அரசுக்காக,
காவல் சார்பு ஆய்வாளர்,
தேவகோட்டை தாலுகா காவல் நிலையம்.
குற்ற எண்: 315/2025

**........ எதிர்மனுதாரர் / குற்ற முறையீட்டாளர்**

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/ வாகன உரிமையாளரின் மனைவி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி. பாகம்பிரியாள், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் / குற்ற முறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்......

**உத்தரவு**

1. இம்மனுவானது மனுதாரர் தரப்பில் பி.என்.எஸ்.எஸ் பிரிவுகள் 497, 503-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இவ்வழக்கானது U/s. 331(4), 305(a), 62 BNS ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மனுதாரர் / வாகன உரிமையாளரின் மனைவி தரப்பில் இம்மனு பி.என்.எஸ்.எஸ் பிரிவுகள் 497 மற்றும் 503ன் கீழ் மனுதாரருக்கு சொந்தமான TN 63 AS 5451, என்ற பதிவெண் கொண்ட Hero Splender Plus (Engine No. HA10ERGHE95428, Chassis No. MBLHA10CGGHE05787) என்ற இரு சக்கர வாகனத்தை மனுதாரர் / வாகன உரிமையாளர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்க கோரி மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

3. இருதரப்பும் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

4. மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் மனுதாரரின் கணவர் வெளிநாட்டில் வேலை செய்து வருவதாகவும், எனவே அவது உடமைகளை மனுதாரர் பராமரித்து வருவதாகவும், மேற்படி வாகனத்தின் ஆர்.சி.புக்கும் மனுதாரர் வசமே உள்ளதாகவும், மேற்படி வாகனம் எதிர்மனுதாரரால் பறிமுதல் செய்யப்பட்டு தற்பொழுது வரை எதிர்மனுதாரர் வசம் உள்ளதாகவும், மேற்படி வாகனத்திற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் மனுதாரர் மனு சொத்தின் உரிமையாளர் என்பதை எதிர்மனுதாரர் மறுக்கவில்லை என்றும், மேலும் நிலைய பாதுகாவலில் இருக்கும்போது மனுச்சொத்தான TN 63 AS 5451, என்ற பதிவெண் கொண்ட Hero Splender Plus (Engine No. HA10ERGHE95428, Chassis No. MBL-HA10CGGHE05787) என்ற இரு சக்கர வாகனத்தை பயன்படுத்தாமல் இருந்தால் வாகனத்தின் இயந்திரத்தின் ஸ்த்திரத்தன்மை பாதிக்கப்படும் என்றும் மேற்படி

சொத்து மனுதாரரின் பயன்பாட்டிற்கு தேவைப்படுகிறது என்றும் மனுச்சொத்தினை மனுதாரர் நீதிமன்றம் கோரும்போது ஆஜர் செய்ய தயாராக இருக்கிறார் என்று கூறி மனுவை அனுமதிக்குமாறு வேண்டி வாதிட்டார்.

5. அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் எதிரி பயன்படுத்திய TN 63 AS 5451, என்ற பதிவெண் கொண்ட Hero Splender Plus (Engine No. HA10ERGHE95428, Chassis No. MBLHA10CGGHE05787) என்ற இரு சக்கர வாகனம் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு பி.ஆர்.எண். 249/2025 பெறப்பட்டு தற்போது காவல்நிலை பாதுகாப்பில் உள்ளதாகவும், மேற்படி வழக்கு சொத்தானது எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்பதால் மனுதாரர் வசம் விடுவித்தால் மனுதாரர் வழக்கு விசாரணையின்போது ஆஜர்படுத்த மாட்டார் என்பதாலும், வழக்கு சொத்தை விற்பனை செய்துவிடுவார் என்பதாலும் இவ்வழக்கு புலன்விசாரணில் இருந்து வருவதாலும் மனுதாரர் வசம் வழக்கு சொத்தை பிணையில் விடுவதற்கு கடும் ஆட்சேபனை தெரிவித்து வாதிட்டார்.

6. இருதரப்பு வாதங்களையும், வழக்கு ஆவணங்களையும் பரிசீலனை செய்ததில் இந்த மனுவில் கண்ட TN 63 AS 5451, என்ற பதிவெண் கொண்ட Hero Splender Plus (Engine No. HA10ERGHE95428, Chassis No. MBLHA10CGGHE05787) என்ற இரு சக்கர வாகனத்தை இந்நீதிமன்ற பி.ஆர்.எண் 249/2025-ல் நிலைய பாதுகாவலில் இருப்பதை அறிய முடிகிறது. மேலும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டை நகல்களை பரிசீலிக்கையில் மனுதாரர் தான்

அழகப்பன் என்பவரின் மனைவி என்பதை முகநோக்கு அளவில் நிரூபித்துள்ளார். மேலும் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாகனத்தின் பதிவுச்சான்றிதழ் நகலில் இருந்து மனுதாரரின் கணவரான அழகப்பன் என்பவர்தான் மேற்படி வாகனத்தின் உரிமையாளர் என்பதும் தெரியவருகிறது. மேலும் எதிர்மனுதாரரும் மனுதாரர் தான் மேற்படி வாகன உரிமையாளரின் மனைவி என்பதையும், மேற்படி சொத்து மனுதாரரின் கணவருக்கு சொந்தமானது என்பதையும் மறுக்கவில்லை என்பதாலும், மனுதாரரின் கணவர் பெயரில் வாகனத்தின் பதிவுச்சான்றிதழ் இருப்பதாலும், மனுதாரர் வாகன உரிமையாளரின் மனைவி என்பதையும் வாகன உரிமையாளரான அழகப்பன் வெளிநாட்டில் இருப்பதையும் கருத்தில்கொண்டும் மேலும் மேற்படி வாகனம் நிலைய பாதுகாவலில் இருப்பதால் பராமரிப்பு இல்லாமல் இயந்திரத்தின் ஸ்த்திரதன்மை பாதிக்க வாய்ப்பு உள்ளது என மனுதாரர் கூறுவதை கருத்தில் கொண்டும் மேலும் வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும், நீதியின் நலன் கருதியும் இம்மனுவை நிபந்தனைகளுடன் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**7. இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு இந்நீதிமன்ற PR.No. 249/2025-ல் கண்ட மேற்படி வாகனத்தை மனுதாரர் வசம் இடைக்கால பொறுப்பில் மறு உத்தரவு வரும்வரை கீழ்கண்ட நிபந்தனைகளுடன் ஒப்படைத்து உத்தரவிடப்படுகிறது.**

## <u>நிபந்தனைகள்</u>

1. ரூ.1,00,000/-த்திற்கு மனுதாரர் தனக்காகவும், அவருக்காக இரு நபர் ஜாமீன்தாரரும், அதே தொகைக்கு ஜாமீன் பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டும்.

2. மேற்படி மனு சொத்தை புகைப்படம் மற்றும் குறுந்தகடு எடுத்து புகைப்படத்தின் பின்புறம் மனுதாரர், மனுதாரரின் வழக்கறிஞர் மற்றும் விசாரணை அதிகாரியின் கையொப்பம் பெற்றும் மேற்படி புகைப்படம் எந்த கேமராவில் எடுக்கப்பட்டதோ அந்த நபரிடம் புகைப்படம் எடுத்ததற்கான பி.எஸ்.ஏ சட்டப்பிரிவு 63 ன் கீழான சான்று பெற்று மனுதாரர் தாக்கல் செய்ய வேண்டும்.

3. மனுதாரர் வாகன பதிவு சான்றிதழின் சான்றிடப்பட்ட நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

4. மேற்படி மனுசொத்தை மனுதாரர் அழிக்கவோ அல்லது அதன் தன்மையை மாற்றவோ, விற்கவோ கூடாது என்றும், நீதிமன்றம் கேட்கும்போது மனுசொத்தை ஆஜர்படுத்தவேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

5. மேற்படி மனு சொத்திற்கு தயார் செய்யப்படும் பஞ்சநாமாவில் மனுதாரர் மற்றும் சாட்சியும் கையொப்பம் இடவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

6. மனுதாரர் பிணை கொடுக்கும் போது அசல் பதிவு சான்றிதழை நீதிமன்றத்தின் பார்வைக்கு சமர்பித்து திரும்ப பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18-ம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

POORNIMA

Digitally signed by POORNIMA
Date: 2026.03.18 18:03:35 +0530

நீதித்துறை நடுவர்,

தேவகோட்டை.